முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை: திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் நவம்பர் மாதம் 05ம் தேதி புதன்கிழமை
இடைநிலை மனு எண்.3/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.4/2025
இன்
அசல் வழக்கு எண்.105/2016

-----

1) ராஜாராம்
2) செல்வராஜ்
3) அர்ச்சுனன்
4) அலமேலு ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

1) பாண்டியம்மாள்
2) ஜெயபாண்டி
3) சௌந்திரபாண்டி ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இறுதியாக, இம்மனுக்கள் 30.10.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும்,

எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு தரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## பொதுவான உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் பி.வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டி மீண்டும் re–open செய்யவும், பி.வா.சா.1ஐ மீண்டும் recall செய்ய வேண்டி கட்டளை 18 விதி 17ன் கீழ் இந்த இரண்டு மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனுக்கள் சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.**

1.1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அசல் வழக்கில் பி.வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டி மீண்டும் re–open செய்யவும், பி.வா.சா.1ஐ மீண்டும் recall செய்ய வேண்டியும் இந்த இரண்டு மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் இம்மனுக்களை எதிர்மனுதாரர்கள் தரப்பு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரி ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

1.3) மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**2) தீர்வு**

2.1) மேற்படி இரண்டு இடைநிலைமனுக்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால் பொதுவான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2.2) மேற்படி மனுக்களை பரிசீலனை செய்ததில், மேற்படி அசல் வழக்குகளானது விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டு, வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் எடுக்கப்பட்டு, கடந்த 01.09.2025ம் தேதியன்று இருதரப்பு வாதுரைக்காக வாய்தா

ஏற்பட்டிருந்ததாகவும், DW1ஐ மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்றும், எனவே, மனுதாரர்கள் தரப்பில் DW1 இன் குறுக்கு விசாரணைக்காக, DW1ஐ திரும்பப் அழைக்க வேண்டும் என்றும் இந்த இரண்டு இடைநிலை மனுக்களும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.3) எனவே, மேற்படி அசல் வழக்குகளின் சூழ்நிலையை கருத்தில் கொள்ளும்போது, பி.வா.சா.1ஐ recall செய்து, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வது இருதரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கானதாகவும், சட்டப்படியானது மற்றும் நீதியின் நலன்பொருட்டு உகந்தது என்பதை கருத்தில்க்கொண்டும், மேற்படி பி.வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்வதால் அசல் வழக்குகளில் தரப்பினர்களுக்கு இடையேயுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு காரணியாக அமையுமே தவிர, வழக்கு தரப்பினர்கள் யாருக்கும் சட்டத்திற்கு புறம்பான சாதக பாதகம் ஏற்படபோவதில்லை என்பதை கருத்தில்கொண்டு, பி.வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யும்விதமாக அசல் வழக்கை Re-open செய்து DW-1ஐ Recall செய்தும் உத்தரவிடுவது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** இந்த இரண்டு மனுக்களும் நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்பட்டு, DW.1– நீதிமன்றத்தில் ஆஜராகும் அன்றே வாதிகள் தரப்பில் DW–1ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்றும், மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு ஒரு மனுவிற்கு ரூ.300/– செலவுத்தொகை செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனுக்கள் தானாக தள்ளுபடி செய்யப்படும் என்றும் இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 05.11.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.05 16:40:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

**இணைப்பு:–**

**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.05 16:40:33 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.3/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.4/2025
இன்
அசல் வழக்கு எண்.105/2016
செவ்வை உத்தரவு
நாள் : 05.11.2025